# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2056/41 - 2018 පෙබරවාරි මස 02 වැනි සිකුරාදා - 2018.02.02

*2056/41 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

எனது இலக்கம் : PS/CSA/00/1/14

***இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடமிருந்து***

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

பின்வருவோருக்கு :

1. கௌரவ அனில் குணரத்ன, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி
2. திரு. எத்தாவுட ஆரச்சிகே காமினி ரோஹன் அமரசேக்கர, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
3. திரு. பியசேன ரணசிங்க, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி
4. திரு. மல்லவாரச்சிகே தொன் அந்தனி ஹரல்ட், ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்
5. செல்வி வசந்தா ஜயசீலி கப்புகம கீகனகே, பணிப்பாளர் நாயகம், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை

வாழ்த்துக்கள் !

இத்தோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாக புரியப்பட்டுள்ள, சார்த்துதல் செய்யப்பட்ட ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினாலும் ;


1A - G 26159 — 22 (2018/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த ஆணைப்பத்திரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் விபர ஆய்வு மற்றும் விசாரணை எவ்வாறிருந்தபோதிலும், இந்த ஆணைப்பத்திரத்தின் கீழ் தெரிவிக்கப்பட்ட விடயம் சம்பந்தமான விசாரணை மற்றும் விபர ஆய்வின் நோக்கெல்லை தமது நியதிச்சட்ட மற்றும் சட்டப் பொறுப்புக்களை பிரயோகிக்கும் இயைபுள்ள அதிகாரசபைகளின்மீது எந்தவகையிலும் ஒரு செயல் தடையை சுமத்தமாட்டாது என்பதைக் கருத்திற்கொண்டும், இயைபுள்ள அதிகாரசபைகள் பிரயோகமாகும் எழுத்துமூல சட்டங்களின் பிரகாரம் இயன்றவிடத்து எடுக்கக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்வதை சிந்தித்து அவற்றை மேற்கொள்ளவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டும் ;

இந்த ஆணைப்பத்திரத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகளும், விபர ஆய்வுகளும், பொலிஸ், லஞ்சம் மற்றும் ஊழல் குறித்த சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட வகையில், இயைபுள்ள அதிகார சபைகளால் மேற்கொள்ளப்பட்ட அல்லது இனிமேல் மேற்கொள்ளப்படவிருக்கும் ஏதாவது நடவடிக்கைகளுக்கு மேலதிகமானவையும், அவற்றுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுத்தாதவையும் என்பதைக் கவனத்திற்கொண்டும் ;

இத்தோடுள்ள அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய விடயம் சம்பந்தமாக விபரஆய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டு, இத்தோடுள்ள குறித்த அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் குறித்து அத்தகைய ஒழுங்கீனங்களில் சம்பந்தமுற்ற நபர்கள், எவருமிருப்பின், அவர்களை இனங்காணுவது அவசியமாகியுள்ளமையாலும் ;

இத்தோடுள்ள அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள குறித்த விடயம் சம்பந்தமாக புரியப்பட்டுள்ள ஒழுங்கீனங்கள் விடயத்தில் சம்பந்தமுற்ற நபரை, நபர்களை அல்லது தனியதார்த்த அமைப்புகளை, எவருமிருப்பின், இனங்காணுவது அவசியமாகியுள்ளமையினாலும் ;

எதிர்காலத்தில் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், இந்த ஆணைப்பத்திரத்தின் அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்ட அத்தகைய விடயம் சம்பந்தமாக விசாரணை மற்றும் விபர ஆய்வை மேற்கொள்ளவைப்பது தேசிய நலன்களுக்கு உகந்ததென்று நான் அபிப்பிராயம் கொள்வதாலும் ;

இத்தோடுள்ள குறித்த அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள குறித்த விடயம் சம்பந்தமாக விசாரணை மற்றும் விபர ஆய்வு மேற்கொள்வதற்கு ஒரு விசாரணை ஆணைக்குழுவை நியமிப்பது அவசியமென்று நான் அபிப்பிராயம் கொள்வதாலும் ;

ஆகவே, இப்பொழுது, தங்களின் செயலறிவு, ஆற்றல் மற்றும் விசுவாசத்தில் பாரிய நம்பிக்கைவைத்து, இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், திருத்தப்பட்டவாறான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (அத்தியாயம் 393) ஏற்பாடுகளின் பிரகாரம் இதன்மூலம் குறிப்பிட்ட ;

1. கௌரவ அனில் குணரத்ன, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி
2. திரு.எத்தாவுட ஆரச்சிகே காமினி ரோஹன் அமரசேக்கர, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
3. திரு. பியசேன ரணசிங்க, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி
4. திரு. மல்லவாரச்சிகே தொன் அந்தனி ஹரல்ட், ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்
5. செல்வி வசந்தா ஜயசீலி கப்புகம கீகனகே, பணிப்பாளர் நாயகம், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை

என்போரை பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக விசாரணை மற்றும் விபர ஆய்வு மேற்கொள்வதற்காக எனது ஆணையாளர்களாக நியமிக்கின்றேன் :

(அ) இத்தோடுள்ள குறித்த அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்ட விடயம் சம்பந்தாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் (இதனகத்துப்பின்னர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் என அழைக்கப்படுவது), ஸ்ரீலங்கா கேட்டரிங் லிமிட்டட் (இதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் என அழைக்கப்படுவது), மற்றும் மிஹின் லங்கா (தனியார் லிமிட்டட்) (இதனகத்துப்பின்னர் மிஹின் லங்கா என அழைக்கப்படுவது) என்பவற்றின் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் விவகாரங்களை நடத்துதல் ;

(ஆ) இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்ட அத்தகைய விடயம் சம்பந்தமாக அத்தகைய முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் விவகாரங்களை நடத்துதல் என்பவை குறித்தவகையில் ஏதாவது பொறுப்பற்ற நடைமுறை, ஒழுங்கீனம், முறையான பொருளாதார மற்றும் நிதியியல் செயல்அறிவு, நியமங்கள், வழிகாட்டல்கள், நடவடிக்கை முறைகள் மற்றும் சிறப்பான நடைமுறைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகாமை அல்லது அவற்றைப் புறக்கணித்தல் இடம்பெற்றுள்ளதா என்பதும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா உள்ளிட்டவகையில் அரசாங்கத்துக்கு அல்லது ஏதாவது நியதிச்சட்ட அமைப்புக்கு நேரடியான அல்லது கூறப்படும் இழப்பு, சேதம் அல்லது தீங்கு விளைந்துள்ளதா என்பதும், அத்தகைய இழப்புகளின் தன்மையும், பரிமாணமும் ;

(இ) இத்தோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள, குறித்த விடயத்துடன் தொடர்புற்றவகையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா என்பவை சம்பந்தமான ஒப்பந்தக் கடப்பாடுகள் மோசடியாக, அசட்டையாக, உதாசீனமாக, செயலறிவற்ற முறையில் அல்லது பொறுப்பற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டு, உரிய தொழில்சார் கவனமின்றி அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள், வழிகாட்டல்கள், மற்றும் மிகச்சிறப்பான நடைமுறைகள் இல்லாதவகையில் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தால், அரசாங்கத்துக்கு, ஏதாவது நியதிச்சட்ட அமைப்புக்கு அல்லது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங், மற்றும் மிஹின் லங்கா என்பவை உள்ளிட்டவகையில் ஏதாவது தனியதார்த்த அமைப்புக்கு இழப்பு, சேதம் அல்லது தீங்கு ஏற்பட்டுள்ளதா என்பதும், அத்தகைய இழப்புகளின் தன்மையும், பரிமாணமும் ;

(ஈ) இத்தோடுள்ள குறித்த அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள விடயம் அரசாங்கத்துக்கு, ஏதாவது நியதிச்சட்ட சபைக்கு அல்லது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங், மிஹின் லங்கா என்பவை உள்ளிட்ட வகையில் வேறு ஏதாவது தனியதார்த்த அமைப்புக்கு அதிசிறப்பான அனுகூலத்தை வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் முறையான பொருளாதார மற்றும் நிதியியல் செயலறிவு, நியமங்கள், வழிகாட்டல்கள், நடவடிக்கைமுறைகள், மிகச்சிறப்பான நடைமுறைகள் மற்றும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதும் ;

(உ) இத்தோடுள்ள குறித்த அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள குறித்த விடயம் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு , ஏதாவது நியதிச்சட்ட அமைப்புக்கு அல்லது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா என்பவை உள்ளிட்ட வகையில் வேறு ஏதாவது தனியதார்த்த அமைப்புக்கு அத்தகைய இழப்பு, சேதம் அல்லது தீங்கை ஏற்படுத்திய செயல், செயலின்மை அல்லது நடத்தைக்கு பொறுப்பான நபர் அல்லது நபர்கள் ;

(ஊ) இத்தோடுள்ள குறித்த அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள மேற்குறித்த விடயம் சம்பந்தமாக ஏதாவது விபர ஆய்வு அல்லது விசாரணை எந்தவகையிலாவது தடைசெய்யப்பட்டதா அல்லது தடுக்கப்பட்டதா என்பதும், இதன்மூலம் அரசாங்கத்துக்கு, ஏதாவது நியதிச்சட்ட அமைப்புக்கு அல்லது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா என்பவை உள்ளிட்ட வகையில் வேறு ஏதாவது தனியதார்த்த அமைப்புக்கு ஏதாவது இழப்பு, சேதம் அல்லது தீங்கு விளைவிக்கப்பட்டதா என்பதும், அப்படியெனில், இத்தகைய முட்டுக்கட்டைக்கு பொறுப்பான நபர் அல்லது நபர்கள் ;

(எ) இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய விடயம் சம்பந்தமாக எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு, ஏதாவது நியதிச்சட்ட அமைப்புக்கு அல்லது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா என்பவை உள்ளிட்ட வகையில் வேறு ஏதாவது தனியதார்த்த அமைப்புக்கு அதிசிறப்பான அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஒழிவுமறைவின்மை, முறையான தொழில்சார் கவனம் மற்றும் வகைப்பொறுப்புடன் மேற்கொள்ளப்படுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் ;

(ஏ) இத்தோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டு, எடுத்துரைக்கப்பட்டுள்ள குறித்த விடயம் சம்பந்தமாக அதிகாரத்தின் தவறான பிரயோகம் அல்லது துஷ்பிரயோகம், செல்வாக்கு, தலையீடு, மோசடி, ஊழல் மற்றும் உறவினர்களுக்குச் சலுகை அல்லது வேறு ஏதாவது செயல் அல்லது செயலின்மை இடம்பெற்றுள்ளதா என்பது ;

(ஐ) இத்தோடுள்ள குறிப்பிட்டுள்ள அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள குறித்த விடயம் சம்பந்தமாக இந்த ஆணைப்பத்திரத்தின் நியதிகளின்கீழ், விபர ஆய்வு அல்லது விசாரணை செய்யப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக விதப்புரைகளை மேற்கொள்ளுதல்.

அத்தோடு, மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக நான் குறிப்பிட்ட கௌரவ அனில் குணரத்ன ஆகிய தங்களை இத்தால் நியமிக்கின்றேன்.

இத்தோடுள்ள குறித்த அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள மேற்கூறிய விடயம் சம்பந்தமாக அத்தகைய சகல விபர ஆய்வுகளையும், ஏனைய சகல விசாரணைகளையும் அவசியமான வகையில் மேற்கொள்வதற்கு தங்களுக்கு இத்தால் அதிகார அங்கீகாரத்தையும், அதிகார வலுவையும் வழங்குவதோடு, இந்த ஆணைப்பத்திரத்தின் திகதியில் இருந்து ஆறு (06) மாத காலத்தினுள் எனக்கு ஓர் அறிக்கையையும்/ அறிக்கைகளையும் மற்றும் தங்கள் கையொப்பத்துடன் தங்கள் விபர ஆய்வுகள் மற்றும் விசாரணைகளின் தேடல் முடிவுகளையும் மற்றும் அவை சம்பந்தமான தங்கள் விதப்புரைகளையும் சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

அத்தோடு இதனுடனுள்ள குறித்த அட்டவணையில் எடுத்துரைக்கப்பட்ட மேற்கூறிய விடயங்கள் சம்பந்தமான விபர ஆய்வுகள் அல்லது விசாரணையின் அத்தகைய பகுதி தங்கள் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப்படுவதோடு, அது பகிரங்கமாக இடம்பெறுதல் ஆகாது என நான் இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.

அத்தகைய சகல உதவிகளையும், அது சம்பந்தமாக முறையாக வழங்கக்கூடிய அத்தகைய சகல தகவல்களையும் தாங்கள் விண்ணப்பிக்கும்போது வழங்குமாறு நான் சகல அரசாங்க உத்தியோகத்தர்களையும், ஏனைய நபர்களையும் இத்தால் வேண்டிக்கொள்வதோடு, பணிப்புரையும் விடுக்கின்றேன்.

அத்தோடு நான் மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவிற்குப் பொருந்தியமையும் என்பதை இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின்கீழ், இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் கட்டளைப்படி,

ஒஸ்டின் பர்ணாந்து,
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட், ஸ்ரீலங்கன் கேட்டரிங்ஸ் லிமிடெட் மற்றும் மிஹின் லங்கா தனியார் லிமிடெட் என்பவை சம்பந்தமான, 2006, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2018, சனவரி 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் புரியப்பட்டதாக சார்த்துதல் செய்யப்பட்ட பின்வரும் விடயங்கள் சம்பந்தமான ஒழுங்கீனங்கள் :

(அ) பொதுத்திறைசேரி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் வேறு ஏதாவது நிதி நிறுவனம் அல்லது தனியதார்த்த அமைப்பின் நிதியளிப்பு உள்ளிட்ட வகையில் நிதிகளை உட்செலுத்துதல்.

(ஆ) மிஹின் லங்காவை தாபித்தமையும், அதன் செயற்பாடுகளும் மற்றும் அவற்றை முடிவுறுத்தலும்.

(இ) காரணங்கள் மற்றும் அவற்றின் கிளைத்தல் விளைவுகள் உள்ளிட்டவகையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் சர்வதேச விமானக் கம்பனி ஆகிய எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் என்பவற்றுக்கிடையிலான உடன்படிக்கைகளை முடிவுறுத்தல்.

(ஈ) வானூர்திகள் மற்றும் வேறு ஏதாவது சொத்துக்களின் கொள்முதல், விற்பனை, குத்தகை, விற்பனை மற்றும் மறு குத்தகை, உரித்து மாற்றம், பரிமாற்றம் , விடுவித்தல் மற்றும் கைதவிர்ப்புச் செய்தல் சம்பந்தமான உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதலும், நீடித்தலும் மற்றும் இரத்துச்செய்தலும்.

(உ) 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட வகையிலான வானூர்திகள் மற்றும் வேறு ஏதாவது சொத்துக்களின் கொள்முதல், விற்பனை, குத்தகை, விற்பனையும் மறு குத்தகையும், உரித்து மாற்றம், பரிமாற்றம், விடுவித்தல் மற்றும் கைதவிர்ப்பு என்பவை உள்ளிட்டவகையில் பொருட்கள் மற்றும் சேவைகளை கையகப்படுத்தலும், புதிய வானூர்திகளை வாங்கி தரத்தைப் பேணுதலும் (Refleeting).

(ஊ) பொருட்கள், சேவைகள் மற்றது வேறு ஏதாவது பணி வழங்கல் சம்பந்தமாக முகவர்கள், தரகர்கள், ஆலோசனைச் சேவையாளர்கள், நிறுவனங்கள் மற்றும் வேறு எவராவது தனிநபர் அல்லது தனியதார்த்த அமைப்பு என்பவற்றை கூலிக்கு அமர்த்துதலும், நியமித்தலும்.

(எ) ஏனைய நாடுகளில் வழித்தட வலையமைப்புகளையும், அலுவலகங்களையும் ஆரம்பித்து, பேணி, தொடராது நிறுத்துதல்.

(ஏ) ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா என்பவற்றுக்கிடையிலான கொடுக்கல்-வாங்கல்கள்

(ஐ) ஆளணியினரின் ஆட்சேர்ப்பு, நியமனம், ஊதியம் வழங்கல், பதவியுயர்வு, இடமாற்றம், ஆட்குறைப்பு மற்றும் ஓய்வு வழங்குதல் என்பவை உள்ளிட்ட வகையிலான மனிதவள முகாமைத்துவம், பணிப்பாளர் சபைகள், பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்கள், தவிசாளர்கள் மற்றும் ஏனைய சிரேட்ட முகாமையாளர்களை நியமித்தல்.

(ஒ) நிதியியல் அறிக்கையிடல், பொருத்தமான கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்கியொழுகுதல் மற்றும் நிதியியல் செயல்நிறைவேற்றம் மற்றும் நிலைமை.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.